

# உரிமையானவர்களும் தகுதியானவர்களும்

## இளம் வாசகர்களுக்கான இயற்கைக் கதைகள்


ஆக்கம்: வித்யா<br>
ராஜாராம் சர்மா

மொழிபெயர்ப்பு: சுரேந்தர் பூபாலன்<br>
செம்மையாக்கம்: த. பரசுராமன்

உதவி: க.ச. அமுதா<br>
சு. மகேஸ்வரி<br>
இரா. நளினி

# பிற கதைகள்


மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்


முட்டைகளின் மர்மம்

பெரியதும் சிறியதும்

ரகசிய சபதம்

ஆச்சரியத்தில் நான் வாய் பிளந்து நின்றேன். விநோதமான பெரிய அலகு கொண்ட சாம்பல் நிறப் பறவை. அது பெருமுயற்சி ஏதுமில்லாமல் மரத்திலிருந்த பொந்துக்குள்ளே ஒவ்வொரு இலையாக போட்டுக்கொண்டிருந்தது. மேலும் சில கனிகளையும் போட்டது. அப்பறவை அலகின் முனைக்கு இலைகளைக் கொண்டு வருவதற்கு ஒவ்வொரு முறையும் தலையை வெளியே இழுத்து குலுக்க வேண்டியிருந்தது. இது அநேகமாக ஐந்து நிமிடங்களுக்கு நடந்தது. பின்னர், அப்பறவை தன் அலகை மரத்தின் பட்டை மேல் துடைத்துவிட்டுப் பறந்து சென்றது.





அப்பொந்து உயரமான மரத்தின் மேல்பகுதியில் அமைந்திருந்தது. அதனால் அங்கு நடப்பதைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. பொந்துகளில் கொட்டைகளை ஒளித்து வைக்கும் அணில்களைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; இப்பறவையும் அதுபோல் ஏதேனும் செய்கிறதோ?

அப்பறவை திரும்பி வரும்வரை காத்திருக்க அருகிலிருந்த மரத்தின் மேல் சாய்ந்தேன்.

இச்சமயத்தில் எனக்குத் திடீர் பயம் ஏற்பட்டது.


அம்மரப்பொந்துக்குள் ஏதோ இருக்கிறது; அது கலகலவென்னும் ஒலியை எழுப்புகிறது. கரகரப்பான கலகலவெனும் ஓசை தொடர்ந்தது. “இன்னொரு பொந்து!” என

மரத்திலிருந்த இன்னொரு சிறிய துவாரத்தைக் கண்டுபிடித்ததால் நான் வியந்தேன்.

நான் என் கால் விரல் நுனியில் நின்று மரப்பொந்துக்குள் எட்டிப் பார்த்தேன். ஆனால், அப்பொந்துக்குள் எதுவுமே இல்லை. அந்தச் சத்தம் மரப்பொந்துக்குள் இருந்துதான் வந்தது.

நான் திரும்பிச்செல்ல முற்பட்டபோது மைனா அளவிலிருந்த பச்சை நிறப் பறவை அந்த மரத்தின் ஒரு கிளையில் வந்து அமர்ந்தது. அதன் அலகில் அத்திப்பழம் இருந்தது!

அப்பறவை சுற்றும் முற்றும் பார்த்தபடியே, சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்தது. அதற்கு மிகப்பெரிய சிவப்பு நிற அலகு இருந்தது. அதன் உடலுக்கு அது மிகப் பெரியது.





சிறிது நேரத்துக்குப் பின் அப்பறவை நேரே மரப்பொந்துக்குப் பறந்துச் சென்று உட்புகுந்தது. சில நொடிகளில் அப்பறவை தன் அலகுகளில் குப்பையோடு வந்தது.

“ஏய்! என்ன இது?” என்று அப்பறவையைக் கேட்டேன்.

அப்பறவையால் பதிலளிக்க இயலவில்லை.


“அது தன் குஞ்சுகளுக்காக மரப்பொந்தைச் சுத்தம் செய்கிறது” என்றது மரங்கொத்திப் பறவை.


“குஞ்சுகள்! குஞ்சுகளா உள்ளே இருக்கின்றன?”

“அவை எழுப்பும் சத்தம் உனக்கு கேட்கவில்லையா?”

“ஓ! அந்தச் சத்தம்... சத்தத்தை எழுப்புவது குஞ்சுகளா!” வியப்படைந்தேன். ஆனால் அவ்வொலிகளை எழுப்புவது குஞ்சுகள் தான் என்று தெரிந்ததும் நான் அமைதியானேன்.

“இது நாங்கள் கூடு கட்டி முட்டையிடும் காலம். என் கூடு அங்கே காட்டு வேம்பு மரத்தில் இருக்கிறது. தாழ்ந்த மரக்கிளையில் இருக்கும் வட்ட வடிவப் பொந்து உனக்குத் தெரிகிறதா? அது மரக்கிளையின் அடிப்புறம் இருக்கிறது. அதில்தான் என்னுடைய இறகுடைய இரண்டு குஞ்சுகளும் இருக்கின்றன.





“இறகுடையவையா?”

“இந்தக் கூட்டைவிட்டுப் பிரிந்து சென்று புதிய கூட்டைச் சுயமாகவே அமைத்துக்கொள்ள அவை தயாராக இருக்கின்றன” என்று அப்பறவை பெருமையுடன் கூறியது.

“ஓ! அந்தப் பெரிய சாம்பல் நிறப் பறவையும் தன் குஞ்சுகளுக்கு இரை ஊட்டிக்கொண்டுதான் இருந்திருக்குமோ!”


“இல்லை. அதன் மனைவி இது.”


நான் மலைத்துப் போனேன். அந்தப் பறவை கூறியதை நான் சரியாகக் கேட்டேனா? அந்தப் பறவையைக் கண்டுபிடிப்பதற்கான வழியே இல்லை. மரங்கொத்திப் பறவை

அந்த இடத்திலிருந்து போய்விட்டது.

அந்த மரங்கொத்திப் பறவையினுடைய பொந்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கூடியது. அதனால் அந்தப் பொந்தை நெருங்கிப் பார்க்க முடிவெடுத்தேன். அதிலிருந்த குஞ்சுகள் மாறி மாறி வெளியே எட்டிப் பார்த்தன. அவை இப்பூமியில் இணையும் பொருட்டு தமது ஒளிமிக்க கண்களால் அதை ஆராய்ந்து கொண்டிருந்தன. அதிலொன்று எதற்காகவோ ஒலியெழுப்பியது. ஆ! என்ன ஓர் ஆரவாரமான, மூர்க்கமான ஒலி.

“பறவைகளுக்கு நாக்கு இருக்கிறது என்று ஒருபோதும் எனக்குத் தெரியாது!”





“ஆமாம். எங்களுக்கும் நாக்கு இருக்கிறது. சில வகை பறவைகளுக்குச் சிறியதாக இருக்கும். சிலவற்றுக்கு நீளமாக இருக்கும். எங்கள் இனத்துக்கு அதிக நீளமாக இருக்கும்; எங்கள் அலகைவிட நீளம்” என்று

மரங்கொத்திப் பறவை அடிமரத்தை உறுதியாகப் பற்றியபடி கூறியது. “நாங்கள்…”

அப்பறவை கடைசியாகக் கூறியது அங்கெழுந்த கூச்சலில் கரைந்து போனது. மைனாக்களும் கிளிகளும் அருகிலிருந்த கொன்றை மரத்தில் உரத்த குரலெழுப்பி சண்டையிடத் தொடங்கிருந்தன. “அங்கே என்ன நடக்கிறது?” என்று நான் கேட்டேன்.


“பொந்துச் சண்டை” என்றது அப்பறவை.

“மைனாக்களும் கிளிகளும் மரத்திலுள்ள ஒரு பொந்தைச் சொந்தம் கொண்டாடுகின்றன. அவையும் மரப்பொந்துகளில்தான் கூடுகளை அமைக்கும். பொந்துகளுக்கு எப்போதுமே பற்றாக்குறைதான்!”

“கூட்டை உருவாக்குபவர்தானே சொந்தக்காரர்! பிறகு, அவை ஏன் பொந்துகளுக்காகச் சண்டையிடுகின்றன?” இப்பிரச்சனை எனக்குச் சாதாரணமாகத் தோன்றியது.

“அங்கே சொந்தக்காரர்கள் என்ற பேச்சே இல்லை, மேலும்





யார் கூட்டை உருவாக்கியது என்று எவரும் நினைவில் வைத்துக் கொள்வதில்லை”.


மரங்கொத்திகள் போதுமான இரக்கம் காட்டுவதால் மரப்பொந்துகள் அதிக வெளிச்சம் பெறுகின்றன. மரங்களுக்கு வயதாகும்போது அவற்றைப் பாதுகாக்கும் பட்டைகள் பாதிப்படைகின்றன. அவற்றின் கிளைகளும் புயலில் சிக்கி பாதிப்படைகின்றன; முறிந்தும்விடுகின்றன. மனிதர்களால் வெட்டப்படுகின்றன. பிறகு பூச்சிகள், பூஞ்சைகள், மழை நீர், காற்று எளிதாக மரத்தினுள் புகுகின்றன. மரத்தண்டின் மையப்பகுதி அல்லது பெரிய கிளை ‘மரவைரம்’ என்று அழைக்கப்படுகிறது. இதன் மீது நீர் மற்றும் பூஞ்சையின் செல்வாக்கு அதிகரிக்கும்போது, அது அழுகிப்போகிறது. அவ்விடங்களில் துவாரங்கள் உருவாகின்றன.

“துவாரங்கள் இயற்கையானவை. அவற்றை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது” என்று உறுதிபடக் கூறியது.

“ஆனால், உன் கூட்டில் வட்ட வடிவில் நேர்த்தியான துவாரம் இருக்கிறதே. அது இயற்கையாக உருவானது போன்று இல்லையே.”

“மரப்பொந்துகள் இயற்கையாக உருவானதாக இருக்கலாம் அல்லது பறவை உருவாக்கியதாக இருக்கலாம். இங்குள்ள மரங்களில் வட்ட வடிவத் துவாரத்தை நீ பார்த்தாயானால் அது மரங்கொத்தி அல்லது குக்குறுவானால் உருவானதாகத்தான் இருக்கும்.

“குக்குறுவானா?”





“ஏன், நீ முன்னர் பார்த்த பச்சை நிறப் பறவையின் முழுப்பெயர் கூட பச்சைக் குக்குறுவான்தான்” என்று அப்பறவை விவரித்தது.

“ஆ! அது குக்குறுவான்தானே” என மீண்டும் ஒருமுறை பொந்துக்கு வந்தப் பறவையைக் காட்டிக் கேட்டேன்.


“ஆமா. இப்பறவைகள் அலகைத் திறந்தபடியே மரத்தைக் கொத்தி வட்ட வடிவத் துவாரத்தை உருவாக்கும். பிறகு, மரத்தின் மையப் பகுதியைக் குடைந்து கூட்டிற்கு ஏற்ற நேர்த்தியான பொந்தை உருவாக்கும். எங்களைப் போலவே!”

“நான் ஒருபோதும் பறவைகளின் அலகுகளின் மேல் அதிகக் கவனத்தைச் செலுத்தியதில்லை. அலகுகள் வெவ்வேறு

வடிவங்களிலும் அளவுகளிலும் இருக்கின்றன.”

“கிளிகளால் பொந்துகளை உண்டாக்க முடியாது என்று அவற்றின் வளைந்த அலகை ஒருமுறை பார்த்தாலே உனக்குப் புரியும். ஆனால் மைனா எப்படி?”

“நீ நினைப்பது தவறு!” என்று மரங்கொத்திப் பறவை குறிப்பிட்டது. “கிளிகள் மரங்களில் நன்கு செயலாற்றி தங்களுக்கு ஏற்றபடி பொந்துகளைப் பெரிதாக்கும். ஆனால், மைனாக்களோ ஏற்கனவே உள்ள பொந்துகளைத் தனதாக்கிக் கொள்ளும். உண்மையில் இவ்விரு பறவைகளும் தங்களுக்குப் பொருத்தமான எந்தப் பொந்திலும்; ஏன் சுவரிலுள்ள துவாரத்தில் கூட கூடுகளை அமைக்கும்!”





“கிளிகளும் மைனாக்களும் கூடுகளைத் திருடும் என்கிறீர்களா?”

“திருடுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. எங்கள் எல்லாருக்கும் பொந்துகள் தேவை. எங்களில் சிலர் அவற்றை உருவாக்குவார்கள் மற்றவர்கள்... அவற்றைக் கண்டுபிடிப்பார்கள்! பொந்துகளை பாதுகாப்பதிலேயே அதிக காலத்தையும் ஆற்றலையும் நாங்கள் செலவிடுகிறோம்.”

தோப்பு அமைதியானது. மைனாக்களுக்கும் கிளிகளுக்கும் இடையே எழுந்த சச்சரவு முடிவுக்கு வந்தது. பொந்து கிளிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. இதை நான் மரங்கொத்திப் பறவையிடம் குறிப்பிட்டேன்.

“இந்த அமைதியை நம்பாதே. இது தற்காலிகமானதாகக்கூட இருக்கலாம். இரண்டுமே வலியத்தாக்கும் இயல்புடையவை. அதனால், இதை அமைதி என்று ஒருவராலும் சொல்ல முடியாது” என மரங்கொத்திப் பறவை என்னிடம் கூறியது. மேலும் கிளிகள் குக்குறுவான்களை அவற்றின் கூடுகளிலிருந்து வெளியேற்றுவதில் எவ்வாறு அடிக்கடி வெற்றி அடைகின்றன என்றும் கூறியது.

“ஆனால் அது நேர்மையற்ற செயல்,” என்று மறுப்பு தெரிவித்தேன்.

“இல்லை. அது அப்படி இல்லை” என்று எவ்விதக் காரணமும் தெரிவிக்காமல் அப்பறவை கூறியது.





பறவைகளின் வலியத்தாக்கும் தன்மையைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கும்போதே ஏதோவொன்று விர்ரென கடந்து சென்றது. திடுக்கிட்டேன், கலக்கத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தேன்.


“இருவாய்ச்சி (மரத்தலையன்) திரும்பிவிட்டது” என மேலே இருந்த மரப்பொந்தைப் பார்த்து மரங்கொத்திப் பறவை கூறியது. “அவை கூடுகட்டும்போது அமைதியாக இருக்கும். ஆனால், அவை வேகமாகப் பறந்து செல்லும் போது, உன்னால் எப்போதும் சத்தத்தைக் கேட்க முடியும்.”

இருவாய்ச்சி. அறிமுகமற்ற அந்தப் பறவையின் பெயரை நான் அறிந்து கொண்டேன். ஆனால், அது தன் மனைவிக்கு உணவு ஊட்டுவது ஏன் என்று இன்னும் தெரியவில்லை. “நீ

இருவாய்ச்சியின் மனைவியைப் பற்றிக் கூறினாய் இல்லையா?”

“ஆமாமா. அவை எங்களைப் போலல்ல. தாய் இருவாய்ச்சி தன் முட்டைகள் குஞ்சு பொரித்த பிறகும் ஒரு மாத காலம்வரை பொந்துக்குள்ளேயே இருக்கும். அச்சமயத்தில் சிறு பிளவைத் தவிர அப்பொந்து முழுவதும் மூடப்பட்டிருக்கும்! ஆண் இருவாய்ச்சி தன் மனைவிக்கு அப்பிளவு வழியாகத்தான் உணவளிக்கும்.”

இவ்வளவு நீண்ட காலம் இருண்ட பொந்துக்குள் தங்கி இருக்கும் பறவையை நினைத்து நான் திகைத்துப் போனேன். இது நிச்சயமாக அற்புதமான பறவைதான். மூடப்பட்டிருக்கும் பொந்தில் சிறு பிளவு. இது சிறைவாசம்தான்! நான் மனம் வருந்தினேன். இது நியாயமானதா இல்லையா என்று எனக்குத்





தெரியவில்லை. ஆனால், இதை அநியாயம் என்று மரங்கொத்தி நினைக்காது என்று எனக்குத் தெரியும்.

“பார்!” என்று கூக்குரலிட்டது மரங்கொத்திப் பறவை. மைனா இருவாய்ச்சியை உடலாலும் வாய்மொழியாலும் தாக்குகிறது.

ஒருவேளை முன்னர் சண்டையிட்ட அதே மைனாவாகத்தான் இருக்கும். இருவாய்ச்சிப் பறவை நிலை தடுமாறி, பின்வாங்கி அருகிலிருந்த மரக்கிளைக்குச் சென்றது. ஒவ்வொரு முறையும் இருவாய்ச்சி அங்கு வந்து இரை ஊட்டுவதைத் தொடர்ந்தபோது மைனா அதை அங்கிருந்து துரத்த முயற்சி செய்தது.

“மை…! மைனாக்கள் பிடிவாதமான பறவைகள். ஆனால் இருவாய்ச்சி எதிர்ப்பேதும் தெரிவிக்கவில்லை!”

“அது…அது… அதுதான் சிறைவாசத்தின் ரகசியம்!” என்று கூறியது மரங்கொத்தி.



<u>கதாபாத்திரங்களின் அறிமுகம்</u>

*இக்கதை கடந்த 2010 ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் தெற்கு டில்லியில் உள்ள கல்வி வளாகங்களில் உற்றுநோக்கியதன் அடிப்படையில் உருவானது.*

*இப்புத்தகத்திலுள்ள புகைப்படங்கள் பறவைகளின் உண்மையான அளவைக் குறிக்காது.*



பொன்முதுகு மரங்கொத்தி



**பச்சைக் குக்குறுவான்**



ஆண் சிவப்பு ஆரக்கிளி (கழுத்தில் இளஞ்சிவப்பு ,கருப்பு வளையம் கொண்டது), பெண் சிவப்பு ஆரக்கிளி



மைனா



தந்தை சாம்பல் இருவாய்ச்சி



தாய் சாம்பல் இருவாய்ச்சி (மழுங்கிய தலைக் கவசம் போன்றிருப்பதைக் கவனிக்கவும்)

உரிமையானவர்களும் தகுதியானவர்களும் published by VIDYA ONLINE is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported License (http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/)
Permissions beyond the scope of this license may be available at admin@vidyaonline.org

http://vidyaonline.net